2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தமிழ் நாடு கால்நடை உதவியாளர் சங்க நிர்வாகக் குழு தலைமைச் செயலகத்தின் முன்பு உண்ணாவிரதம் இருக்க எடுத்திருக்கும் முடிவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. கோவிந்ததாசன் அவர்கள் சட்டப்பேரவை விதி 42-ன் கீழ்—

"தமிழ்நாடு கால்நடை உதவியாளர் சங்க நிர்வாகக் குழு கால்நடை உதவியாளர்களின் கோரிக்கைகள் தீர்க்கப்படாமலிருப்பது குறித்து வருகிற மார்ச் 16-ம் நாளன்று ஊர்வலமாக வந்து தமிழக அரசு தலைமைச் செயலகத்தின் முன்பு உண்ணாநோன்பு மேற்கொள்வதென்று முடிவெடுத்துள்ளதால் எழுந்துள்ள அவசரமும், பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை விவாதிக்க அவையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

இது அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டது. மேலும் உண்ணாவிரதம் இருப்பது போன்ற நிகழ்ச்சி இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைப்பதற்கான ஒன்றாக இருக்காது என்று பல தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் நான் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

கிளையூரில் தி.மு.க.வினர் ஏற்றிய கொடியை வெட்டி வீழ்த்தியதும், விசாரிக்க வந்த காவல் துறையினர் தாக்கப்பட்டதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. மலைச்சாமி அவர்கள் உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த ஒரு நிகழ்வை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ் 'மேலூர் வட்டம், கிளையூரில் பொங்கலன்று திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் ஏற்றிய கொடியை வெட்டி வீழ்த்தியவர்களை விசாரிக்க வந்த கீழவளவு காவல் நிலையத்தைச் சார்ந்த தலைமை போலீஸ்காரரையும், போலீஸ்காரரையும் பலர் சேர்ந்து தாக்கிக் காயப்படுத்தி, சட்டைகளைக் கிழித்து எறிந்த கொடுமையான நிகழ்ச்சியினைப்பற்றிய' அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 14—1—1970-ம் நாட் காலை 9 மணியளவில் கீழவளவு காவல் நிலைய எல்லைக்குள் அமைந்த கிளையூர்க் கிராமத்தைச் சேர்ந்த சிலருடன் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் சிலர், அக் கிராமத்தில் அரிசனச் சேரிக்குள் சென்று ஊராட்சிக் கிணற்றுக்கு அருகில் தி.மு.க. கொடியை ஏற்றினர். ஒரு மணி நேரத்திற்குப் பின், அந்த இடத்திலிருந்து அக்கொடி அகற்றப்பட்டிருப்பதைக் கண்டனர். இவ்வாறு கொடியை அகற்றியது யார் என்று அவர்கள் வினவினர். அந்த நேரத்தில்